REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

பஞ்சாயத்துத் தேர்தல்கள்: 2 ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு

சென்னை, நவ 9—

மாநில முழுவதும் பஞ்சாயத்து மன்றங்களுக்கான தேர்தல்கள் இந்த டிசம்பர் திங்களில் நடைபெற வேண்டும்; ஆனால், அவற்றை அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு ஒத்திவைக்க சர்க்கார் முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

மாநிலப் புது அமைப்பை ஒட்டி எழுந்துள்ள நிலைகளைச் சரிசெய்யவும், ஐந்தாண்டுத் திட்டம் குறித்த வேலைகள் செய்யவும்

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: ஐப்பசி 24உ வியாழன் (10—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 25உ வெள்ளி (11—11—55) [இதழ் 127

பாக். அகதிகள் மேலும் இறக்குமதியாவர்!

அதற்கான முயற்சி தீவிரமாகிறது

தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கு இல்லையா?

காங்கிரஸ் செயற்குழு முடிவுகள்?

புதுடில்லி, நவ. 9—

அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு, மாநில புது அமைப்புத் திட்டம் பற்றி விவாதித்துவிட்டு இறுதி முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது.

பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் அமைப்பதில்லை; அதற்குப் பதிலாக, பம்பாயை தனி மாநிலமாக அமைப்பது; விதர்ப்பம் அடங்கிய மராட்டிய மாநிலம் அமைப்பது; குஜராத்தி மாநிலம் அமைப்பது; தெலிங்கானா பகுதிகளை ஆந்திரத்துடன் சேர்த்து விசால ஆந்திரம் அமைப்பது; பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம் குறித்து தொடர்புடைய மக்களின் விருப்பப்படி முடிவெடுப்பதற்கு நேரு—தேபர்—பண்டித பந்த்—ஆசாத் ஆகியோர் கொண்ட குழு அமைப்பது என்பவை சில முக்கியமான முடிவுகளாகும்.

மாநிலக் குழு சிபாரிசு செய்தபடி, மகாகோசலம், விந்தியப் பிரதேசம், மத்திய பாரதம், போபால் ஆகியவற்றை இணைத்து, 'மத்தியப் பிரதேசம்' என்ற மாநிலம் அமைப்பதை செயற்குழு வரவேற்று ஏற்றுக்கொண்டிருக்கிறது.

நியமிக்கப்பட்டுள்ள துணைக்குழு, மைசூர் உள்ளடங்கிய கர்நாடக மாநிலம் அமைப்பது குறித்தும், அதை ஒட்டி எழுந்துள்ள எல்லைத் தகராறுகளைக் குறித்தும் கவனிக்கும் என்று முடிவு செய்திருக்கிறது.

உத்தரப் பிரதேசம், தேவை எனக் கருதப்படுகிற சில சிறிய எல்லை மாறுதல்களுக்கு உட்பட்டு இப்போதிருப்பதைப் போன்று அப்படியே நீடிப்பது என்றும் முடிவாகியிருக்கிறது.

சென்னையில் ஏற்படும் சில மாறுதல்களுடன், மற்றும் சில எல்லைத் திருத்தங்கள் இவற்றிற்கு உட்பட்டு கேரள மாநிலம் அமைப்பது என்றும், செயற்குழு முடிவெடுத்திருக்கிறது.

இது குறித்து காங்கிரஸ் மேலிட வட்டாரம் கூறுவதாவது:—

"கேரளத்துடன் இருக்கவேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டுள்ள தேவிகுளம், பீர்மேடு சென்னையுடன் முழுவதுமாக இணைக்கப்பட வேண்டுமா, அல்லது, இரு மாநிலங்களின் எல்லைகளும், சென்னையின் நோக்கத்திற்கு ஓரளவு மதிப்பளிக்கிற வகையில் திருத்தி அமைக்கப்பட வேண்டுமா என்பதே முடிவாக வேண்டிய விஷயமாகும்."

"மேலும், லட்சத் தீவுகள் சென்னையுடன் இணைவதற்குப் பதிலாக கேரளத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று குழு சிபாரிசு செய்திருப்பதற்கு மாறாக, அந்தத் தீவுகளை மத்திய சர்க்காரின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரவேண்டும் என செயற்குழு கருதுகிறது."

தென் மாநிலக் கோரிக்கை

'எவரும் அக்கரை காட்டவில்லை' கக்கன் தகவல்

சென்னை, நவ. 9—

"சென்னை, திரு-கொச்சி, குடகு இவை இணைந்த ஒரு தென் மாநிலம் (தட்சிணப் பிரதேசம்) வேண்டும் என்று, வட்டாரக் காங்கிரஸ் தலைவர்கள் மாநாட்டில் கோரப்பட்டதைக் குறித்து எவரும் அக்கரை காட்டவில்லை,"

என்று, தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கக்கன் தெரிவித்திருக்கிறார்.

'மலையாளப் பிரதேச காங்கிரஸ் தலைவர் மட்டுமே தனியாக, அந்தக் கோரிக்கைக்குக் குரல் எழுப்பினார்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைய வேண்டும் என்றும், இது விஷயத்தில் மாநிலக் குழுவினர் தமிழர்களுக்கு அநீதி இழைத்திருப்பதாயும் கூட்டத்தில் குறிப்பிட்டதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் இதர ஐந்து வட்டங்களுடன் சேர்ந்து சென்னையுடன் இணையும் என தான் நம்புவதாயும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிச்சை பெறும் அகதிகள் இரண்டரை இலட்சம்

டில்லி ஆதிபத்தியத் தூதுவரின் சாகசம்

சென்னை, நவ. 9—

பாகிஸ்தானிலிருந்து ஓடி வரும் அகதிகளுக்கு சென்னை மாநிலத்தில் வாழ்வளிப்பது குறித்து, இந்தியப் பேரரசின் அகதி இலாகா செயலாளரான சி. என். சந்திரா, சென்னை சர்க்கார் பிரதம செயலாளர் சத்தியநாதனைச் சந்தித்து விவாதித்ததாகத் தெரியவருகிறது.

அகதிகள் புனரமைப்புக்கான திட்டங்களை கொண்டு செலுத்துவதற்காக, தேவையான நிலம் தந்து உதவுமாறு இந்திய சர்க்கார் சென்னை சர்க்காரைக் கேட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

பத்திரிகையாளரிடம் பேசிய அந்த மத்திய சர்க்கார் அதிகாரி, இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் சென்ற அகதிகள் இங்குவிட்டுச் சென்ற சொத்துக்களின் மதிப்பு சுமார் ரூ. 100 கோடிதான் என்றும், ஆனால் இந்தியாவுக்கு ஓடிவந்த அகதிகள் பாகிஸ்தானில் விட்டுவந்த சொத்துக்களின் மதிப்பு ரூ. 500 கோடி என்றும், இதனை பாகிஸ்தானிடமிருந்து திரும்பப் பெறுவது என்பது, பாகிஸ்தானின் சக்தியைப் பொறுத்துக் கணக்கிடவேண்டிய ஒன்றாகும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானிலிருந்து ஓடிவருகிற அகதிகளில் பலர் விவசாயிகளாயிருப்பதால், அவர்களை வாழ்விக்க நிலம்தான் அதிகமாகத் தேவைப்படுகிறது என்றும், அந்த நிலத்தைப் பெறுவதற்காக பல மாநிலங்களிலும் சுற்றிவருவதாயும், ஆனால் சென்னையில் நிலம் கேட்பதற்காக தான் வரவில்லை என்றும், அகதிகள் சொத்து பராமரிப்பு முதலிய வேலைகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைக் கண்டறிந்து செல்லவே தான் வந்ததாயும் மழுப்பிவிட்டிருக்கிறார்.

இந்தியப் பேரரசு, தினம் செலவுக்குப் பணம் தந்து பாதுகாத்துவரும் அகதிகளின் எண்ணிக்கை சுமார் இரண்டரை லட்சம் என்றும், பாகிஸ்தானில் இன்னும் சுமார் 90 லட்சம் இந்தியர்கள் இருக்கின்றனர் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

எல்லையோரத்தில் ஆப்கன் துருப்புகள்

பாகிஸ்தான் சர்க்கார் ஆட்சேபக் குறிப்பு

நல்லெண்ண ஒப்பந்தத்தை மீறுவதாகக் குற்றச்சாட்டு

கராச்சி, நவ 9—

பாகிஸ்தான் எல்லையோரத்தில் ஆப்கன் துருப்புக்களைக் குவிப்பதை எதிர்த்து பாகிஸ்தான் சர்க்கார் கண்டனக் குறிப்பொன்றை ஆப்கன் நாட்டுக்கு அனுப்பி இருப்பதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் கொடித் தகராறின்போது செய்துகொள்ளப்பட்ட நல்லெண்ண ஒப்பந்தத்தை ஆப்கன் சர்க்கார் பகிரங்கமாக மீறி வருவதாயும், இதனை பாகிஸ்தான் கண்டிப்பதாயும் குறிப்புக் கூறுகிறது.

தேவை என்று கருதுகிற நடவடிக்கைகளை பாகிஸ்தான் மேற்கொள்ளும் என்றும், இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு ஆப்கனிஸ்தானே பொறுப்பு என்றும் குறிப்பு எச்சரிக்கிறதாம்.

பாகிஸ்தான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுள், எல்லையை அடைத்து விடுவதும் ஒன்றாயிருக்கக் கூடும் என்றும் தெரிய வருகிறது.

எல்லையோரத்தில் மோதுதல்

ஐவர் கொல்லப்பட்டனர்; ஒருவர் கைது

விழ்த்தப்பட்ட 'விரோதி'கள் யார்?

மேற்கு பாகிஸ்தான் வடக்கு எல்லையில் பாகிஸ்தான் துருப்புக்களுடன் யாரோ ஒரு 'பகைவர் கோஷ்டி' மோதிக் கொண்டதாயும், அதன் விளைவாக அந்தப் 'பகைவர்'களில் ஐவர் கொல்லப்பட்டனர் என்றும், ஒருவர் சிறை பிடிக்கப்பட்டார் என்றும், இந்தப் பகைவர் கோஷ்டியினர் எந்த நாட்டவர் என்று இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் சர்க்கார் வெளியிட்டுள்ள குறிப்பொன்று கூறுகிறது.

இந்தப் 'பகைவர் கோஷ்டி' ஆப்கனிஸ்தானிலிருந்து வந்திருக்கலாமா என்பது பற்றியும் விசாரிக்கப்படுவதாகவும் குறிப்புக் கூறுகிறது.

மோதுதலின்போது 14 துப்பாக்கிக் குண்டுகளும், ஒரு வெடிகுண்டும் வெடிக்கப்பட்டதாயும் கூறப்படுகிறது.

'பக்துனிஸ்தான் சிக்கல்' என்று கூறி, ஆப்கனிஸ்தான், பாகிஸ்தானுக்கு எதிராக பலாத்காரமான முறையில் பிரச்சாரம் செய்து வருவதாகவும், இந்த நிலையினால் விபரீதம் ஏற்படும் என்றும், பாக். சர்க்கார் குறிப்பு எச்சரிக்கை விடுக்கிறது.

மேற்கு நாடுகள் திட்டம் நிராகரிப்பு!

ரஷ்யாவின் நோக்கம் பற்றி 'மூவர்' கூட்டறிக்கை

ஜினீவா, நவ. 9—

"ஜெர்மனியையும் கம்யூனிஸ்டு நாடாக்கவேண்டும்—என்ற நோக்கத்துடன்தான், மேற்கு ஜெர்மனியுடன் கிழக்கு ஜெர்மனியை இணைப்பதற்கான சுயேச்சையான தேர்தலை ரஷ்யா எதிர்க்கிறது," என்று, மேற்கு அயல்நாட்டுமந்திரிகள் மூவரும், மாநாட்டின் 8வது மந்திராலோசனைக்குப் பின்பு, கூட்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஐரோப்பியப் பாதுகாப்பு உத்தரவாதங்கள் கொண்டதும், அதே நேரத்தில் ஜெர்மனியின் ஐக்கியத்தை வற்புறுத்துவதுமான மேற்கு நாடுகளின் திட்டத்தை, ரஷ்ய வெளிநாட்டு மந்திரி மாலடோவ் நிராகரித்தார். கிழக்கு ஜெர்மனியின் சமூக அமைப்பு பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் மீண்டும் ஜெர்மன் இராணுவம் உருவாகாமல் தடுக்க வேண்டுமென்றும் அவர் கோரினார்.

இலங்கை மொழிச் சிக்கல் நெருக்கடியாகிறது

தாயகம் திரும்ப கொத்தலாவலைக்குத் தந்தி

சிங்கள தலைவர்கள் பலர் மொழிவெறியில் சிக்குண்டனர்

கொழும்பு, நவ. 9—

"மொழிச் சிக்கல் குறித்து யாழ்ப்பாணத்தில் தாங்கள் குறிப்பிட்டது, நாட்டில் ஒரு பெரும் நெருக்கடியை உண்டாக்கியிருக்கிறது; எனவே, உடனே தாயகம் திரும்புக,"

என்று, ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கும் இலங்கைப் பிரதமர் கொத்தலாவலைக்குத் தந்தி ஒன்று அனுப்ப முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த முடிவை இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான இலங்கை சுதந்திரக் கட்சியின் கண்டி கிளை மேற்கொண்டிருக்கிறதாம்

சில திங்களுக்கு முன், பிரதமர் கொத்தலாவலை யாழ்ப்பாணத்தில் பேசும்போது, தேவையானால் சிங்களத்தைப் போலவே தமிழுக்கும் சமநிலை அளிப்பதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்தவும் தான் விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 10-11-'55 வியாழன்

சாஸ்திரியார்தான் விளக்க வேண்டும்

"தென்னாட்டில் வட நாட்டுத் தலைவர்களைப் பாராட்டிப் புகழ்ந்து மரியாதை காட்டுகிறோம்: ஆனால், வட நாட்டினரோ, தென்னாட்டுத் தலைவர்களைப் பாராட்டுவதும் கிடையாது—மரியாதை காட்டுவதும் கிடையாது. இருந்தாலும், 'தென்னாட்டவர் குறுகியமனப்பான்மை கொண்டவர்கள்—மாகாணப் பித்துக்கொண்டவர்கள்'—என்று குற்றஞ் சுமத்தப்படுகின்றனர்" என, மனம் புழுங்கி, முன்னாள் நீதிபதி பதாஞ்சலி சாஸ்திரியார் அவர்கள் குறிப்பிட்டதைக் குறித்து நேற்று எழுதி இருந்தோம்.

சாஸ்திரியார் அவர்களின் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை என்பதை எவரும் ஒப்புவர். ஒரு சிறு மறுப்பும் கூற எவருக்கும் துளியும் துணிவு இருக்காது.

சாஸ்திரியார் அவர்களின் பேச்சிலிருந்து எது குறுகிய மனப்பான்மை? எது விரிந்த மனப்போக்கு? என்பதைக் கண்டறிந்து முடிவு கட்டுவது அவ்வளவு இலகுவானதாக இல்லாது இருந்தபோதிலும், அவருடைய வாயுரையிலிருந்து ஒரு உண்மைமட்டும் ஐயத்திற்கு இடமின்றி நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. அதாவது, வட நாட்டினர் தென்னாட்டவரால் பாராட்டிப் புகழப்படுவதும்; அதே நேரத்தில் தென்னாட்டினர் வட நாட்டவரால் ஒதுக்கித் தள்ளப்பட்டு அலட்சியப்படுத்தப்படுவதும் விளக்கமாகத் தெரியவருகிறது. அதுவும் ஒரு நீதிபதியின் வாயால் இத்தகுக் கருத்து அரும்பி இருப்பது, மேற்குறித்துள்ள பெரும் உண்மைக்கு உரமூட்டுவதாகவும் இருக்கிறது.

சாஸ்திரியாரின் கருத்தில் உச்சமாக உள்ள மேற்குறிப்பிட்டுள்ள நிகழ் கால நிலைமையை, ஒவ்வொருவரும் மனமார ஒப்புவர் என்பதில் ஐயமில்லை. இருந்தாலும், அவ்விரும்பத்தகாத நிலைமை இருந்து வருவதற்காக சாஸ்திரியார் அவர்கள் கூறியுள்ள காரணமான 'குறுகிய மனப்பான்மை' முழுதும் பொருந்தக் கூடியதுதானா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும்.

'தென்னாட்டவர்' என சாஸ்திரியார் குறிப்பிடும்பொழுது, இப்பெரும் நிலப் பரப்பில் உள்ள பெருங்குடி மக்கள் அனைவரையும் தம மனத்துள் கொண்டுதான் கூறுகிறாரா என்பது சிந்திக்கத்தக்கதாகும். அதற்குக் கிடைக்கும் விடையைப் பொறுத்துத்தான் சாஸ்திரியார் குறிப்பிட்டுள்ள 'குறுகிய மனப்போக்கிற்கு' அனைவராலும், உரிய பொருளை உணர்ந்துகொள்ள முடியும்.

"நான் வட நாடு முழுதும் சுற்றிப் பார்த்து இருக்கிறேன். அங்கு, எந்த ஒரு நகரிலும் '[illegible] மண்டபம்' என்றோ, 'சீனிவாச சாஸ்திரி கல்லூரி' என்றோ, 'கிருஷ்ணசாமி அய்யர் அரசியல் கழகம்' என்றோ இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என, பதாஞ்சலி சாஸ்திரியார் அவர்கள் கூறியுள்ளார். மறுக்க முடியாத உண்மையைத்தான் நீதிபதி சாஸ்திரியார் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதுவுமன்றி 'வேறொரு மாகாணத்தைச் சேர்ந்த [illegible]டிஸ் மகாதேவ ரானடேயின் பெயரால் அவரது நாட்டுப் பற்றையும், சேவையையும் மனதில் கொண்டு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட இந்த நூல் நிலையம், தென்னாட்டவரின் பெருநோக்குக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்' எனவும் சாஸ்திரியார் கூறியுள்ளார்.

இவ்விளக்கம் நம்மில் பலரின் நெஞ்சை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் மற்றொரு முக்கியமான பிரச்சினைக்கு, நீதிபதி சாஸ்திரியார் அவர்களையே விளக்கம் தரும்படி கேட்கத் தூண்டுகிறது. சாஸ்திரியார் அவர்கள் நாணயமாக நேர்மையான பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறார்.

ஆச்சாரியார்—சாஸ்திரியார்—அய்யர் ஆகிய மும்மரபினரின் பெயரால் வடநாட்டில் 'மன்றம்' இல்லையே! 'மண்டபம்' இல்லையே! 'கல்விக் கழகம்' இல்லையே—என கேட்கத் துணிவு கொண்டிருக்கும் நீதிபதி சாஸ்திரியார், டாக்டர் நாயர் பெயரால், வெள்ளுடை வேந்தர் சர். தியாகராயர் பெயரால், ஆற்காடு இராமசாமியார் பெயரால் வடநாட்டில் 'மன்றங்கள்' நிறுவப்படவில்லையே என ஏன் கேட்கத் தவறிவிட்டார்? இந்தத் தவறை சாஸ்திரியார் மட்டுமா செய்திருக்கிறார்—செய்து வருகிறார்?

இத்தவறும் ஏதோ கவலையின்மையால் ஏற்பட்டுவிட்டது எனக் கொள்வதற்கும் இல்லையே! ஆழ்ந்த கருத்துடனும், மிகுந்த கட்டுப்பாட்டுடனும் சாஸ்திரியார் அவர்களின் வர்க்கத்தினர் பல ஆண்டுக் காலமாகச் செய்துவரும் தவறல்லவா இது?

வேறு மாகாணத்தைச் சேர்ந்த கோவிந்த ரானடேயின் நாட்டுப் பற்றையும், சேவையையும் மனதில் கொண்டு, கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே, அவர் பெயரால் ஒரு நூல் நிலையம் கண்ட மயிலை விரிந்த மனப்போக்கினருக்கு சிறந்த தேச பக்தரான மதுரை பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் பெயராலும், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரின் பெயராலும், நூல் நிலையம் காணவேண்டும் என்று நல்லெண்ணம் உருக்கொள்ளாதது ஏனோ?

ரானடேவிற்கு நூல் நிலையம் கண்டவர்கள், சென்னை சாந்தோம் கடற்கரை ஓரத்தில் பிறந்த, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கடுங்கோபத்திற்கும் கொடுந்தண்டனைக்கும் ஆளாக்கப்பட்ட சிந்தனைச் செம்மல் சிங்காரவேலரின் பெயர், மயிலை சாஸ்திரிகளுக்குச் சிந்தாது போகக் காரணமென்ன?

காலஞ்சென்ற தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனாரின் நாட்டுப் பணி, மயிலை விரிந்த மனப்போக்கினரின் கண்களிலும், கருத்திலும் தைக்காதது ஏன்?

டாக்டர் வரதராஜுலு, மயிலை சுயராஜ ஞான மகான்களின் கண்களுக்குப் படாதுபோனது ஏன்?

வடநாட்டுத் தலைவர்களின் நாட்டுப் பற்றும், சேவா நோக்கும், தியாக உணர்வும் பாராட்டிப் புகழத்தக்கது என மயிலை சீமான்களுக்கும் சீமாட்டிகளுக்கும் படுகின்றதே, அதே போன்று தென்னாட்டுப்பெருங்குடியில் தோன்றி அரும் பெரும் தொண்டாற்றிய சிலபலர் விஷயத்திலும் படாதது ஏன்?

இந்தக் கேள்வி நிரம்ப நியாயமானது என எவரும் ஒப்புவர். முன்னாள் நீதிபதி பதாஞ்சலி சாஸ்திரியார் அவர்கள் விளக்கம் தரவேண்டும் இக்கேள்விக்கு. அவர் கூறும் விடையில்தான், எது 'குறுகிய மனப்போக்கு' என்பதற்கான அரிய விளக்கம் அடங்கி இருக்கிறது!

அணு சக்தி
கதிரியக்க விளைவுகள்

எல்லா நாடுகளும் ஆராய்வதற்கு அமெரிக்கா, பிரிட்டன் எதிர்ப்பு

ஐ. நா. அரசியல் குழுவில் பெரும் தோல்வி

நியூயார்க்,—

அமெரிக்காவும், பிரிட்டனும் எதிர்த்த ஒரு பிரேரபனைக்கு எதிராக இந்தியா கொண்டுவந்த ஒரு திருத்தம், பெரும் அளவு வாக்குகளுடன் முதல்தடவையாக ஐ.நா. அரசியல் கமிட்டியில் நிறைவேறியுள்ளது.

அணுக்கதிரியக்க விளைவுகள் பற்றித் தகவல்களைச் சேகரிப்பதும், பரப்புவதும் ஐ. நா. உறுப்பினர் நாடுகளுடனே, அல்லது விசேட ஏஜென்சியின் உறுப்பினர்களுடனே நின்றுவிடவேண்டுமென்றும், ஐ. நா.-வுக்கு வெளியே உள்ள மற்ற நாடுகளுக்குத் தெரியக் கூடாதென்றும் அமெரிக்கா ஒரு தீர்மானம் கொண்டுவந்தது

எட்டு நாடுகளின் இந்தக் கூட்டுத் தீர்மானத்திற்கு எதிராக, 'அணுக் கதிரியக்கத்தினால் ஏற்படும் விளைவுகளை உலகிலுள்ள எல்லா நாடுகளும் ஆராய்ச்சி செய்வதற்கு அனுமதிக்கவேண்டும்' என்று, இந்தியா கொண்டுவந்த திருத்தம், அமெரிக்காவும், பிரிட்டனும் கடுமையாக எதிர்த்தும் கூட, பெரும்பான்மை வாக்குகள் பெற்று நிறைவேறியுள்ளது.

இடுகாட்டிற்கு இடம்வாங்க ரூ. 3 இலட்சம்

சென்னை சர்க்கார் அனுமதி

சென்னை, நவ. 8—

நகருக்கு வெளியே இடுகாடுகளை மாற்றுவதற்கு ரூ. 10 இலட்சம் செலவில், நகர சபை ஒரு திட்டம் தயாரித்து சர்க்காருக்கு அனுப்பியிருந்தது. ஆனால், சென்னை சர்க்கார், இடுகாட்டிற்கான இடம் வாங்குவதற்காக ரூ. 3 லட்சம் மட்டுமே நகர சபைக்கு அனுமதித்திருக்கிறது.

போராட்டத் தலைவிக்கு 10 ஆண்டு சிறைவாசம்

கடந்த ஏப்ரல் 6-ந் தேதியன்று கோவாவில் சத்தியாக்கிரகம் நடத்திய திருமதி சுதா ஜோஷிக்கு, நவ. 2-ந் தேதியன்று போர்ச்சுகீசிய இராணுவ நீதிமன்றம் 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், நாள் 1-க்கு 20 'எஸ்குடோர்ஸ்' அபராதமும் (மொத்தத்தில் ரூ. 86,400) விதித்துள்ளது.

'புரட்சி' செய்த இராணுவ அதிகாரி

தளபதியாக நியமனம்

இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் உத்தரவு

ஜகார்தா, நவ. 7—

மூன்றாண்டுகளுக்கு முன்னால் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றதாகக் கூறி வெளியேற்றப்பட்ட 37 வயதான இராணுவ அதிகாரி ஒருவர் இந்தோனேஷிய இராணுவத்தின் பிரதம தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அப்துல் நாசுஷன் என்ற அதிகாரிக்கு, தளபதியின் சின்னங்களை குடியரசுத் தலைவர் சுகர்னோ இன்று விழா ஒன்றில் அணிவித்திருக்கிறார்.

விழாவில், எல்லா உயர்தர இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டது, அவர்கள் நாசுஷன் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும், நன்மதிப்பையும் தெரிவிப்பதாகும் என்று கூறப்பட்டது.

இராணுவத்தினர், புதிய தளபதியின் தலைமையில் ஒன்றுபடுவர் என்று தான் நம்புவதாக டாக்டர் சுகர்னோ பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

இராணுவத்தினர் சர்க்காருக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற நிலையைத் திரும்பக் கொணருவதற்காக மந்திரிசபையினரும், குடியரசுத் தலைவரும் இவரை இப்போது தளபதியாகப் பொறுக்கி எடுத்திருக்கின்றனர்.

ஒரு தளபதி நியமிப்பதை எதிர்த்து கடந்த ஜூன் திங்களில் உதவி தளபதியாயிருந்த ஜூல்கிபிளி லூபி என்பவரின் கீழ் இருந்த இராணுவ அதிகாரிகள் 'புரட்சி' செய்தனர்; அதன் விளைவாக, 'சர்க்காருக்கு இராணுவம் கட்டுப்பட்டது' என்ற நிலைக்கு ஆபத்து ஏற்பட்டிருந்தது

கடந்த 1952-ல், நாசுஷன், ஒரு உயர்தர இராணுவ அதிகாரியாயிருந்தார். அந்த ஆண்டு அக்டோபர் திங்களில்தான், சில இராணுவ அதிகாரிகள் ஒன்று சேர்ந்து, 'மக்கள் சபையைக் குடியரசுத் தலைவர் கலைத்து விட வேண்டும்' என்று நிர்ப்பந்திக்க முயற்சித்தனர்.

அந்த முயற்சி அப்போது தோல்வியடைந்தது; நாசுஷனும் பதவி இழந்தார்.

காஷ்மீரில் நிலக்கரிச் சுரங்கம்

ரஷ்ய உதவி கோரப்படுமாம்

நியூயார்க், நவ. 8—

காஷ்மீரில் உள்ள நிலக்கரி, பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்களின் வளங்களைப் பெறுவதற்கு ரஷ்யாவின் உதவியை இந்தியா நாடக்கூடும் என்று தெரியவருகிறது.

காஷ்மீரைத் தொழில் மயமாக்கும் திட்டத்தின் கீழ் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறதாம்

'மின்சார மூளை' இயந்திரம்

ரூ. 25 இலட்சம் விலையுள்ளதாம்

ரஷ்யாவிடமிருந்து இந்தியா வாங்குகிறது

கல்கத்தா, நவ. 9—

சோவியத் ரஷ்யாவிடமிருந்து, இங்குள்ள இந்தியப் புள்ளிவிவர ஆராய்ச்சி நிறுவனம் ரூ 25 இலட்சம் பெறுமானமுள்ள 'இயந்திர மூளை' இயந்திரத்தை வாங்கியிருக்கிறதாம்.

இலட்சக்கணக்கான எண்களைக் கூட்டிக் கழித்துப் பெருக்கி இந்த இயந்திரம் கணக்கிட்டுவிடுகிறதாகக் கூறப்படுகிறது. ஆசியாவிலேயே இந்தியாவில்தான் முதன்முதலாக இந்த இயந்திரம் அமைக்கப்படுகிறதாம்

நீண்டகால 'தொல்லை' நீக்கப்படுமாம்!

ரூ. 4 கோடி செலவில் தென்னாட்டிற்குத் திட்டமாம்!

புதுடில்லி, நவ. 9—

இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து தென்னிந்தியாவுக்குச் சரக்கு வண்டிகள் போக்குவரத்தில், நீண்டகாலமாக நிலவிவந்துள்ள 'இடைஞ்சல்'கள், தற்போது படிப்படியாக நீக்கப்பட்டு வருகின்றனவாம்!

குறிப்பிட்ட 'இடைஞ்சல்'களைப் போக்குவதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன்பு இரயில்வே போர்டு அனுமதித்த ரூ. 4 கோடி திட்டம் அமுல் செய்யப்பட்டு வருவதே இதற்குக் காரணமாம்!

தென்னாட்டிலுள்ள சில மார்க்கங்களில், இதனால் போதுமான வெற்றி இன்னும் ஏற்படவில்லையென்று அதிகாரிகள் ஒப்புக்கொள்கின்றனராம் இதற்குக் காரணம், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி காரணமாக போக்குவரத்தின் அளவு எப்பொழுதும் அதிகரித்து வருவதேயாகுமாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்தான், வடக்கு—தெற்கு போக்குவரத்துப் பிரச்சினைக்கு நிரந்தரமான பரிகாரம் சாத்தியமாகும் என்று சுட்டிக் காட்டப்படுகிறதாம்.

அமெரிக்கா - இந்தியா

விமான போக்குவரத்து ஒப்பந்தம்

புதுடில்லி, நவ. 8—

இந்தியாவுடன் ஒரு விமானப் போக்குவரத்து ஒப்பந்தம் செய்து கொள்ளுவதற்காக இங்கு வந்துள்ள அமெரிக்க தூதுக் குழுவினர், இந்தியா தயாரித்துள்ள நகல் ஒப்பந்தத்திற்கு பல திருத்தங்களைக்கொண்டுவந்தனர்.

இத்திருத்தங்கள், இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்குரிய போக்குவரத்து அளவைக் குறைக்கும்—மேலும் விரிவாவதைத் தடுக்கும் என்பதால், இந்தியா ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

எனவே, அமெரிக்க தூதுக் குழுவினர் தங்கள் நாட்டு அதிகாரிகளுடன் இது குறித்து கலந்தாலோசித்துக் கொண்டிருப்பதாயும், வாஷிங்டனிலிருந்து ஆலோசனை எதிர்பார்ப்பதாயும் தெரிவித்திருக்கின்றனர்.

நியாயமான சலுகைகள் தர இந்தியா தயாராயிருப்பதாயும், ஆனால் விவகாரத்தை நோக்குவதற்குரிய அடிப்படைக் கொள்கையை மாற்றிக் கொள்வதற்கில்லை என்றும் கூறியதாகத் தெரியவருகிறது.

வாஷிங்டனிலிருந்து பதில் கிடைத்ததும் மீண்டும் பேச்சு வார்த்தைகள் துவங்கும் என்று கூறப்படுகிறது.

கோவா ரயில்வே தொழிலாளர்கள்

வேலை நிறுத்தம்?

சம்பளப் பட்டுவாடா ஒழுங்கின்மையே காரணமாம்

கார்வார், நவ. 8—

நிர்வாகத்தினர் தங்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் பட்டுவாடா செய்வதில்லை என்று கூறி, கோவா இரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்த அறிவிப்புத் தந்திருப்பதாகக் கூறப்படுகிறது

இவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் ஏற்படும் நிலைமைகளைச் சமாளிப்பதற்காக போர்ச்சுகல்லிலிருந்து தொழிலாளர்கள் சிலர் வரவழைக்கப்பட்டிருக்கின்றனராம்.

பார்வையிடுவர்...!

சோவியத் பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளர் குருஷ்சேவ், ஆகிய இருவரும் தென்னாடு வரும்போது, சென்னை—பெரம்பூரில் உள்ள இரயில் பெட்டித் தொழிற்சாலையையும், மாமல்லபுரத்தையும் பார்வையிடுவர் என்று தெரிகிறது.

செய்திச் சுருள்

★

திராவிட முன்னேற்ற மாதர் கழகத் துவக்கம்

6—11—55 மாலை 5 மணிக்கு, வால்பாறை வட்டாரத்தைச் சேர்ந்த வில்லோனி எஸ்டேட்டில், திராவிட முன்னேற்ற மாதர் கழகத் துவக்க விழா நடைபெற்றது. மாலை 6 மணிக்கு, தோழியர் பி. நேசமணி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழியர் ராக்கம்மாள், தோழர்கள் ஆல்பர்ட் ராஜ், முத்துசாமி, தா. க. அருணாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் ஆ. க. வேலவன் விழாவைத் துவக்கிவைத்து, மாதர் கடமை பற்றியும், கழகக் கொள்கைகளை விளக்கியும் உரையாற்றினார்.

சென்னை ஔவை தமிழ்ச் சங்கம்

சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள ஔவை சங்கத்தின் மூன்றாம் ஆண்டு விழாவினையொட்டி பரிசுப்போட்டி நடைபெற இருக்கின்றது. மொத்தப் பரிசுகள் 11 -என்றும், இது தவிர தகுதி பெறும் மற்றைய பொருள்களுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப் பெறும் என்றும் அறிவிக்கப் படுகிறது. 'புறநானூற்றிலே தமிழர் வாழ்க்கை,' 'யானறிந்த இலக்கியம்,' 'ஒழுக்கத்தின் உயர்வு.'-ஆகிய தலைப்புகளுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கட்டுரையும், 'ஆசையும் அதிருஷ்டமும்', 'நடந்தது இதுவல்ல' என்ற தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்துக் கதையும் எழுதி 25—11—55-க்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது

முகவரி:—' தி. விஜயராகவன், செயலாளர், மூன்றாம் ஆண்டு விழா பரிசுப் போட்டிக்குழு, 12, நல்லதம்பி முதலித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5

திருமணங்கள்

31—10—55-ல் திருப்பத்தூர் தி.மு.க. தோழர் ஏ. ஆர். தனராமனுக்கும்—தோழியர் ருக்மணி அம்மையாருக்கும் பதிவுத் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக, 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

31—10—55-ல் திருவானைக்கா மேல விபூதி பிரகாரம், 7-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் கே. வி. ஆறுமுகம் — தோழியர் வசந்தா திருமணம் சிறப்புற நடைபெற்றது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

2—11—55 காலை 6-30 மணியளவில், கோனேரிப்பட்டியில் தோழர் பி. சின்னண்ணன் தலைமையில் தோழர் பி. தர்மலிங்கம்—தோழியர் அலமேலு திருமணம் நடைபெற்றது. தோழர் என். திருமலைசாமி வாழ்த்துரை வழங்கினார்.

ஃ ஃ ஃ

2—11—55 காலை 9 மணிக்கு திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் வெள்ளனூர் கிராமத்தில், திரு. வே. ந. முத்தமிழ்ச் செல்வன் தலைமையில், தோழர் த. இராசரத்தினம்—தோழியர் பவுன்பாப்பா திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி, தோழர்கள் ஏ. பி. தருமலிங்கம், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர். மணமக்கட்கு உறவினர்களும், நண்பர்களும் பரிசுகள் வழங்கினர். தோழர்கள் பே. து. ஆறுமுகம், பரமசிவம், நடராசன் ஆகியவர்கள் யாவரையும் வரவேற்றனர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு, மணமக்கள் சார்பில் ரூ. 2 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

6—11—55ல், புதுவை திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகத் தோழர் ஆனந்தன் அவர்களது சகோதரர் தோழர் பி. பெருமாள்—தோழியர் பூபதியம்மை திருமணம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் மதிவாணன், வி. இளங்கோ, அன்பரசன் ஆகியோர் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது - வரப் பெற்றோம் - நன்றி-பொறுப்பாளர்.

திருவள்ளுவர் நாள்

தஞ்சை—கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகச் சார்பில், 4—11—55 மாலை 5 மணியளவில், திருவள்ளுவர் நாள் கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் திரு. அரங்கசாமி தலைமை தாங்கினார். விழாவினை மாணவர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தலைவர் தமது முன்னுரையில் திருவையாறு கல்லூரிக்கும், கரந்தைக் கல்லூரிக்கும் உள்ள தொடர்பு குறித்து விளக்கினார். பின்னர், மாணவத் தோழர்கள் விசயராசு, இராமன், செகதீசன் ஆகியவர்கள் வள்ளுவனுக்கு விழா எடுப்பதன் நோக்கத்தையும், வள்ளுவன் இந்நாட்டிற்கும் உலகிற்கும் செய்துள்ள தொண்டினையும் குறித்து விளக்கிப் பேசினர் இடையிடையே வள்ளுவனைக் குறித்து அரசினர் கொண்டிருக்கும் அசிரத்தையைப் காரணங் காட்டி விளக்கினர். தலைவர் தமது முடிவுரையில், திருக்குறளில் பால்கள் (அறம், பொருள், இன்பம்) வைப்பு முறையினையும், ஏனைய சங்க இலக்கியங்களில் அவைகள் கூறப்பட்டுள்ள முறையினையும் (இன்பம், பொருள், அறம்) சான்றுகளுடன் விளக்கினார்.

இறுதியில், வள்ளுவரது உருவப் படத்தை அஞ்சல் தலைகளில் வெளியிட்டு ஏனைய மொழிக் கவிஞர்களைப் பெருமைப்படுத்தியதுபோல் பெருமைப்படுத்த வேண்டும் என்றும், வள்ளுவர் நினைவு நாளாக ஆண்டில் ஒருநாள் அரசாங்க விடுமுறை நாளாக ஏற்படுத்த வேண்டும் என்றும், தமிழ் நாட்டின் சட்ட நூல் வள்ளுவர் குறளின் அடிப்படையில் வகுக்கப் பெற வேண்டுவதுடன், தமிழ் நாட்டின் அமைச்சர்கள் வள்ளுவர் குறட்பாவைக் கொண்டு உறுதிப்பாடு எடுத்துக்கொள்ளல் வேண்டும் என்றும், வள்ளுவர் பெயரால் ஊர்கள், நூல் நிலையங்கள், பள்ளிகள், விடுதிகள், சாலைகள், திடல்கள் அழைக்கப் பெறல் வேண்டும் என்றும், அத்துடன், குறளாராய்ச்சிக்கு அரசியலார் பொருளுதவியும், பிற உதவியும் அளித்து ஊக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

காஞ்சியில் சிறப்புச் சொற்பொழிவு

மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பு

6—11—55 காலை 9 மணிக்கு, காஞ்சி கண்ணன் டாக்கீசில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்களின் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது அக்கூட்டத்தில் வசூலான தொகை ரூ. 308-ம் மாநில மாநாட்டு நிதிக்காக, மாவட்டச் செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

பொன்மலை (மதுரை கிளை) தென்பகுதி ரயில்வே மென் யூனியன்

4—11—55 மாலை 6 மணிக்கு மதுரை மீனாட்சி நிலையத்தில், தோழர் நவநீத கிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கிளையின் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் நடராசன், வேதநாயகம், கோபால கிருட்டிணன், மைக்கேல் ராஜ் ஆகியோரை முறையே தலைவர், செயலாளர், துணைச் செயலாளர். பொருளாளராகக் கொண்ட புத்தாண்டு நிர்வாகக் குழுவும், மத்திய நிர்வாகக் குழு உறுப்பினராகத் தோழர் வெங்கடாசலமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், தற்போது இயங்கிவரும் நூலகத்தை இன்னும் விரிவான முறையில் நடத்துவது பற்றியும், சங்க வளர்ச்சி பற்றியும் ஆலோசிக்கப் பட்டது.

மதுரை தியாகராயர் படிப்பகம்

9—11—55 காலை 11 மணிக்கு, மேற்படி படிப்பகத்தில் தோழர் பி. சண்முகம் தலைமையில் நடைபெற்ற படிப்பக உறுப்பினர்கள் கூட்டத்தில், ஆகஸ்டு, செப்டம்பர் மாத வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டதுடன், மதுரை நகராண்மைக் கழகத் தேர்தலில் வெற்றி பெற்றத் தோழர் எஸ். முத்து அவர்களைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறள் நெறிக் கழகப் பணிமனை திறப்பு விழா

6—11—55 காலை 9 மணிக்கு, சென்னை நுங்கம்பாக்கம், புதுத் தெரு, எண். 9-பி. இல்லத்தில், மேற்படி விழா திரு. அன்புகணபதி தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் தோழர் சங்கரநாராயணன் எல்லோரையும் வரவேற்று பேசிய பின்னர், தலைவர் தம் தலைமையுரையில், குறளின் பெருமைகளையும், குறளைப் பரவச் செய்யும் வழிவகைகளையும் குறித்துச் சொற்பொழிவாற்றினார். தோழர் வி. வி. வேங்கடசுப்பிரமணியன் பணிமனையைத் திறந்துவைத்துப் பேசிய பின்னர், தோழர்கள் சுரதா, சா. சு. மணி, தி பு கிள்ளிவளவன். கலைமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

'திருச்சி மாநில மாநாட்டிற்கு வருவோருக்கு இரயில் கட்டணச் சலுகை தரவேண்டும்'

சென்னை தமிழ் வளர்ச்சி மன்றத் தீர்மானம்

"காங்கிரஸ் கட்சியினர் நடத்தும் மாநாடுகளுக்குச் செல்லும் மக்களுக்கு இரயில்வே கட்டணச் சலுகை கொடுப்பது போல், அண்மையில் திருச்சியில் நடைபெற இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்குச் செல்லும் பொது மக்களுக்கும் இரயில்வே கட்டணச் சலுகை தரப்பட வேண்டும்,"

என்று, சென்னை தமிழ் வளர்ச்சி மன்றத்தில், 6—11—55-ல் நடைபெற்ற மன்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் மூலமாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது

"கும்பமேளா, மகாமகம், திருப்பதி, திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற விழாககளுக்கெல்லாம் கொடுக்கப்படுவதைப்போன்றே, திருச்சி மாநாட்டிற்கு வரும் மக்களுக்கும் இரயில் கட்டணச் சலுகை தருமாறு இரயில்வே நிர்வாக அதிகாரிகளையும், சர்க்காரையும் கோருமாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தைக் கேட்டுக்கொள்ளுகிறது,"

என்றும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுரங்கத் தொழிலாளர்கள் பணியாற்றும் நிலைமை

ஊதியம், வசதிகள் பற்றி ஒரு கண்ணோட்டம்

கோலார், ஐதராபாத் பிரதேசங்களில் உள்ள தங்கச் சுரங்கங்களில் 1954-ம் ஆண்டில் மொத்தம் 18,300 தொழிலாளர்கள் வேலை செய்துவந்தனர்.

இக்கால வரையறையில் தொழிலாளர்களின் சராசரி ஆண்டு ஊதியம் கோலார் தங்க வயல்களில் ரூ. 912—8—0 முதல் ரூ. 961—8—0 வரையிலும், ஐதராபாத் சுரங்கங்களில் ரூ 981—0—0 ஆகவும் இருந்துள்ளது

கோலார் தங்கவயலில் மேல் மட்டத்தில் வேலை செய்பவருக்கு நாளொன்றுக்கு அடிப்படைக் குறைந்தபட்ச ஊதியம் ரூ. 1; பூமிக்குக் கீழ் வேலை செய்யும் தொழிலாளிக்கு குறைந்தபட்சக் கூலி ரூ. 1—4—0; ஐதராபாத் சுரங்கங்களில் மேல் மட்டத்தில் வேலை செய்பவருக்கு குறைந்தபட்சக் கூலி 0-13—9; பூமிக்குக் கீழ் வேலை செய்பவருக்கு ரூ. 1—1—2

இரு இடங்களிலும் வேலை செய்த பெரும்பான்மைத் தொழிலாளர்கள் தினசரிக் கூலி விகிதத்திலேயே வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்; இவர்களின் ஊதியம் வேலை நேரத்தை அனுசரித்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

கோலார் தங்கவயலில் வாழ்க்கைத் தரப் புள்ளியின் ஏற்றத் தாழ்வுக்கேற்றபடி 'கிராக்கிப் படி' கொடுக்கப்படுகிறது; ஐதராபாத்தில் வருமான அளவை ஒட்டி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும், நோய்காலச் சம்பளம், ஆடை அலவன்ஸ், உற்பத்தி போனஸ் போன்ற இதர அலவன்சுகளும் வழங்கப்படுகின்றன.

இரு இடங்களிலும் சிற்றுண்டி வசதி, மருத்துவ மனைகள், பிரசவ நிலையங்கள், பெண் தொழிலாளர் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள், பொழுதுபோக்கு வசதிகள், குளிப்பதற்குரிய வசதிகள் முதலியனவும் தொழிலாளர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கோலார் சுரங்கத் தொழிலாளர்களில் சுமார் 76 சதவிகிதத்தினருக்கு குடியிருப்பு வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. ஐதராபாத்தில் சுமார் 50 சதவிகிதத்தினர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கிறது. இரு இடங்களிலும் 'பிராவிடண்ட் பண்டு' முறை அமுலில் இருக்கிறது.

தரை மட்டத்தில் வேலை செய்வோர், பூமிக்குக் கீழ் வேலை செய்வோர் யாவருக்குமே நாளொன்றுக்கு 8 மணி நேர வேலை நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1954-ல் கோலார் தங்கவயலில் பெரிய, சிறிய விபத்துக்கள் மொத்தம் 4,254 ஏற்பட்டன; ஐதராபாத்தில் பெரிய விபத்துக்கள் 58 ஏற்பட்டன.

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

சென்னையில் அமுலாகும் நிலை குறித்து விளக்கம்

சென்னை, நவ. 7— தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் சென்னை நகரிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் நவ. 19-ந் தேதி சனிக்கிழமை நடு இரவிலிருந்து அமுலுக்கு வரும். குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், இத்திட்டத்தை நவ. 14-ந் தேதி மாலை 4-15 மணிக்கு நகரசபை 'ஸ்டேடியத்'தில் ஆரம்பித்துவைப்பார்.

இத்திட்டம் முதலாவதாக, 1,000 பெண்கள் உட்பட சுமார் 50,000 தொழிலாளர்கள் வேலை செய்யும் 290 தொழிற்சாலைகளுக்கு அமுலுக்கு வரும்.

ரொக்க சகாயத் தொகைகளைத் தொழிலாளர்களுக்கு விநியோகம் செய்வதற்காக திருவொற்றியூர், பெரம்பூர், ஜார்ஜ் டவுன், மவுண்ட் ரோடு, குரோம்பேட்டை பகுதிகளில், காரியாலயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மருத்துவ உதவி அளிப்பதற்காக பல முக்கிய இடங்களிலுமாக முழுநேரம் வேலை செய்யும் வைத்திய நிலையங்கள் 12 ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன; இரு டாக்டர்கள் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை கீழ்ப்பாக்கம், பூந்தமல்லி ஹைரோடில் 73-ம் நம்பர் 'லேக் வைட்' என்ற பங்களாவில் 60 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; மாநில சர்க்கார் மருத்துவ மனைகளில் இன்ஷ்யூர் செய்துள்ள தொழிலாளர்களுக்கெனப் பிரத்தியேகமாக க்ஷயரோக சிகிச்சைக்கும், பிரசவத்துக்கும் படுக்கைகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் இப்பொழுது நாட்டில் முக்கியமான தொழில் வளம் மிகுந்த நகரங்கள் யாவற்றிலும் அமுலில் இருந்துவருகிறது; இதன் மூலம் சுமார் 10 இலட்சம் தொழிலாளிகள் பயன்பெற்றுவருகின்றனர்.

சென்னைப் பிராந்தியத்தில் இத்திட்டம் ஏற்கனவே கோயம்புத்தூர், ஐதராபாத், செகந்திராபாத்திலும், ஆந்திராவில் ஏழு இடங்களிலும் அமுலில் இருந்துவருகிறது; அனேகமாக இது திருவாங்கூர்—கொச்சி மாநிலத்திலும் 1956-ம் ஆண்டு முற்பகுதியில் அமுலுக்குக் கொண்டுவரப்படலாம்.

துங்கபத்திரா திட்ட 'போர்டு'

'மாநிலக் குழுவின் தேவையற்ற கவலை!'

ஹோஸ்பெட், நவ. 7— துங்கபத்திரா அணைக்கட்டுத் திட்ட 'போர்டு' சுமுகமாக வேலை செய்வது குறித்து மாநில புது அமைப்புக் குழுவினர் கவலை தெரிவித்திருப்பது அவசியமில்லாதது என்றும், கடந்த எட்டு திங்களுக்கு முன் 'போர்டு' திருத்தி அமைக்கப்பட்ட பிறகு அது வெகு நன்றாகவே வேலை செய்துவருவதாயும், போர்டு தலைவரான பி. கே. கோகலே தெரிவித்திருக்கிறார்.

'போர்டு' மேற்கொள்ளும் எல்லா முடிவுகளும் ஒருமுகமானவை என்றும், ஒரு போதும் பெருவாரியானவரின் கருத்துப்படி முடிவு மேற்கொள்ளும் நிகழ்ச்சியே இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மாநிலக் குழுவினர் திட்டத்தைக் குறித்தோ அல்லது 'போர்டு' மேற்கொண்டுள்ள வேலை நடைமுறை குறித்தோ தன்னைக் கேட்கவில்லை என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

கடந்த நவம்பர் 3 முதல் 5-ந் தேதி வரை 'போர்டு' தனது 5-வது கூட்டத்தை நடத்தியது என்றும், அணைக்கட்டு வேலை திட்டமிடப்பட்டபடி நடைபெற்று வருவதாயும் தெரிவித்திருக்கிறார்.

அந்தக் கூட்டத்தில் ஆந்திர, மைசூர், ஐதராபாத் ஆகிய மாநில சர்க்கார்களின் அதிகாரிகள் பலரும் பங்கு பெற்றனராம்.

முகவரி மாற்றம்

என். ஏ. ரஷீத்,
33, சாமிபண்டாரம் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2.

மைசூர் கோவிலுக்குள் அந்நியர் நுழைவதற்குத் தடை!

ஐரோப்பிய மருத்துவ, கலாச்சாரக் குழுவினருக்கு அனுமதி மறுப்பு!

இந்துக்கள் மட்டுமே நுழையலாமாம்

பெங்களூர், நவ. 8—

மைசூரிலிருந்து 10 மைல் தொலைவிலிருக்கிற சீரங்கபட்டணம் கோவிலுக்குள் இந்துக்கள் மட்டுமே நுழைய அனுமதிக்கப்படுவர் என்று கூறி, இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் ஐரோப்பிய மருத்துவ, கலாச்சாரத் தூதுக் குழுவினருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

இத்தகவலை அந்தக் குழுத் தலைவரான டாக்டர் ஆர். வி. ஹிங்ரோணி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

குழுவினர், தங்களை விருந்தினராக ஏற்றுக்கொண்டிருக்கும் மைசூரைச் சேர்ந்த சேத் ராமநாராயண் செல்லாராம் என்பவருடன் பெங்களூரிலிருந்து மைசூர் செல்லுகையில், இந்தக் கோவிலைப் பார்க்கவேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்; ஆனால், கோவில் குருக்கள், 'இந்துக்கள் மட்டுமே கோவிலுக்குள் நுழையலாம்' என்று அச்சடிக்கப்பட்ட ஒரு கடிதத்தைக் காட்டி, குழுவினர் நுழையக் கூடாதெனத் தடுத்துவிட்டாராம்!

மைசூர் இராஜப் பிரமுகரிடம் டாக்டர் ஹிங்ரோணி இது குறித்து குறிப்பிட்டதாயும், அவர் இந்தச் சம்பவத்திற்காக வருந்தியதாயும், பெல்லூர் கோவிலுக்குச் சென்று பார்த்து வருமாறு கூறியதுடன் அந்தக் கோவில் அதிகாரிகளுக்கு அதற்காக ஒரு கடிதம் தந்ததாயும் கூறப்படுகிறது.

இலங்கை மொழிச் சிக்கல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில், சிங்கள மொழி வெறியில் சிக்குண்டவர்களாக சில சிங்களக் கட்சியினர் மாறிவருகின்றனர்.

நாட்டின் பல பாகங்களிலும் அவர்கள், 'சிங்களம் மட்டுமே இலங்கையின் ஒரே ஆட்சி மொழியாக ஆக வேண்டும்' என்றும், 'தமிழுக்கு அந்த நிலை தரப்படக் கூடாது' என்றும், வெறிகொண்டு பிரச்சாரம் செய்து வருகின்றனராம். புத்த சன்னியாசிகளும், சிங்களத் தலைவர்களும், சிங்களவரிடையே தமிழருக்கு எதிராக வெறியூட்டிவருவதாகவும் கூறப்படுகிறது.

இன்று, இலங்கையில், இந்த மொழிச் சிக்கல்தான் சாதாரண மனிதனுடைய கவனத்தையும் ஈர்க்குமளவு உச்சம் பெற்றிருப்பதாயும், நிலைமிக நெருக்கடியாகி வருவதாயும் கூறப்படுகிறது.

தோழர் கோவிந்தசாமி

தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து, உடல் நலம் பெற்று 5—11—55-ல் இல்லம் சேர்ந்தார். அவர் இன்னும் சில நாள் ஓய்வு பெறுவதற்காக கடலூர் சென்றுள்ளார்.

கோவையில் 336 தற்கொலைகள்!

சென்னை, நவ. 9—

கடந்த 1954-ம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் மட்டும் கணக்கிற்கு வந்த தற்கொலைகளின் எண்ணிக்கை 336 என்று தெரியவருகிறது.

மதுரை 103, செங்கல்பட்டு 83, திருநெல்வேலி 25, மலபார் 36—என்ற எண்ணிக்கையும் அந்தந்த மாவட்டங்களில் நிகழ்ந்த தற்கொலைகளைக் குறிப்பதாகும். இந்த விபரங்கள் போலீஸ் அறிக்கை மூலம் கணக்கிடப்பட்டிருக்கின்றனவாம்.

பெரும்பாலும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களிலேயே இந்தத் தற்கொலைகள் ஏற்பட்டுள்ளனவாம்.

கலைவாணருக்குப் பொன்னாடை போர்த்தும் விழா

13—11—55 காலை 9 மணிக்கு சென்னை-மயிலை, ரசிக ரஞ்சனி சபாவில், தென்னிந்திய நடிகர் சங்கச் சார்பில், திரு. சங்கரதாஸ் நினைவு நாள் விழாவும், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தும் விழாவும் திரு. ரா. பி. சேது தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் சி. என். அண்ணாதுரை, பி. சம்பந்தனார், ஜீவானந்தம், ம. பொ. சிவஞானம், மற்றும் பல பிரமுகர்களும், நாடக, சினிமா ஆசிரியர்களும், நடிகை, நடிகர்களும் கலந்துகொள்வர். திரு. சம்பந்தனார் அவர்கள் கலைவாணர் அவர்கட்குப் பொன்னாடை போர்த்துவார். விழாவின்போது கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குப் பாராட்டுப் பத்திரங்கள் படித்துக் கொடுக்க விரும்பும் பொது நிறுவனங்களும், நடிகர்களும் முன்கூட்டியே, 'தென்னிந்திய நடிகர் சங்கச் செயலாளர்கள், 162 A, இராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-4' என்ற முகவரிக்கு எழுதி, அனுமதி பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'உதயபானு'க்கள் கவனத்திற்கு!

மலையாளிகளுக்கு டாக்டர் பி. ஜே. தாமஸ் அறிவுரை

எர்ணாகுளம், நவ 9—

"உலகில் வேறு எங்கும் இல்லாத விதத்தில், கல்லூரிகளில் பட்டதாரிகளை உற்பத்தி செய்து, வாலிபர்களைச் சோம்பேறித் தன்மை கொண்டவர்களாகவும், அடிமை வேலை செய்வதில் மோகம் கொண்டவர்களாகவும் செய்ததுடன், அவர்களை இந்தியா முழுமைக்கும் அனுப்பி வைத்துக் கேரளத்தின் நல்ல பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தியவர்கள், தற்போதாவது அந்த நிலைமையை உணரவேண்டும். இம்மாநிலத்தில் விவசாயத்தில் ஈடுபடாமல், குமாஸ்தா வேலைக்கும், சமையல் தொழிலுக்கும், சட்டி பாத்திரம் கழுவுவதற்குமாக வெளி மாநிலங்களுக்குச் செல்பவர்களுக்காகவா 'தட்சிண ராஜ்யம்' அமைய வேண்டுமென்று கோருகின்றனர்?"

என்று, மத்திய சர்க்கார் பொருளாதார ஆலோசகராயிருந்த டாக்டர் பி. ஜே. தாமஸ் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர், மேலும் கூறியிருப்பதாவது:—

"திரு-கொச்சியிலிருந்து கூட்டம் கூட்டமாகப் பட்டதாரிகள் இந்தியாவிலுள்ள எல்லா நகரங்களிலும் முற்றுகையிட்டு வருகின்றனர்; இவ்வாறு செல்பவர்கள், அந்த இடங்களிலுள்ள பட்டதாரிகளுடன் போட்டியிட்டு, தங்களுடைய ஊதியத்தை மிகவும் குறைத்துக் கொள்வதால், அங்குள்ளவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மொழி அடிப்படையில் மாநிலங்கள் ஏற்பட்டுவிட்டால், இவ்வித நிலைமையை இனிமேல் ஒருவரும் அனுமதிக்க மாட்டார்கள்.

"வேலையின்மை என்ற காரணத்தைக் காட்டி, மலைக்கு அப்பாலுள்ள பகுதிகளைக் கேரளத்துடன் இணைக்க வேண்டுமென்று வாதாடினால், அதை ஒருவரும் பொருட்படுத்தப்போவதில்லை.

"கேரளத்தின் பிரதானத் தொழில் விவசாயமாகும். பெரும் இலாபமளிக்கும் விவசாயம் செய்வதற்கான வளமிக்க பூமி, நமது வனங்களில் விசேடமாகவும், மலபார் மாவட்டத்தில் ஏராளமாகவும் இருக்கிறது. தேவிகுளத்திலுள்ள தோட்டங்களில் வேலை செய்வதற்குத் தமிழர்கள்தான் தேவைப்படுகின்றனர்.

"வளமிக்க பூமியைப் பண்படுத்தி, விவசாயம் செய்து பிழைக்காமல், படித்துப் பட்டம் பெற்று, குமாஸ்தா வேலைகளுக்காகக் கும்பல் கும்பலாக அயல் மாநிலங்களுக்குச் செல்லும் மலையாளிகளுக்காகவா, கூடுதல் பூமி வேண்டுமென்று சில பிரமுகர்கள் வாதாடுகின்றனர்?"

சென்னை சர்க்கார் முதல் முயற்சி?

மேட்டுப்பாளையத்தில் காகித உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்படுமாம்!

ரூ. 312 இலட்சம் முதலீட்டுச் செலவில் திட்டமாம்!

கோவை, நவ 10—

இங்கிருந்து 30 மைல் தூரத்தில் உள்ள மேட்டுப்பாளையத்தில் ஒரு காகித உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவுவதற்கு சென்னை சர்க்கார் திட்டம் தயாரித்திருப்பதாகத் தெரிகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்சாலையில் தினசரி எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும் தகுந்த 50 டன் காகிதம் உற்பத்தி செய்யப்படும்.

காகித உற்பத்திக்கு அவசியமான வாட்டில் பட்டை, மூங்கில் முதலிய மூலப்பொருள்கள் ஏராளமாக நீலகிரியில் கிடைக்கிறது.

தற்பொழுது, வாட்டில் பட்டை தோல் பதனிடுவதற்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது.

மின்சார சக்தியும், தண்ணீர் விநியோகமும் ஏராளமாகக் கிடைக்குமாதலால், நீலகிரி மலையடிவாரத்தில் இந்தக் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு இடம் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு முதலீட்டுச் செலவு ரூ 312 லட்சமாகும். முழு உற்பத்தி ஆரம்பமானதும் ரூ. 38 இலட்சம், உபரியாகச் செலவாகும்.

இந்தக் காகித உற்பத்தித் தொழிற்சாலை சென்னை சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கும். சென்னை சர்க்காரே நடத்துவார்கள். அரசாங்க வர்த்தக நிறுவனமாக நடத்தப்படும்.

தற்பொழுது சென்னை மாநிலத்தில் காகித உற்பத்தித் தொழிற்சாலை கிடையாது. சர்க்காருக்கு மாத்திரம் வருடத்திற்கு 4,000 முதல் 5,000 டன் வரை காகிதம் தேவைப்படுகிறது.

ரூ. 363 கோடி செலவில் 138 லட்சம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதியாம்

இரண்டாவது திட்டம் குறித்துப் புள்ளிவிவரம்

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 138 இலட்சம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிப்பதற்கு 363 கோடி ரூ. செலவில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ரூ. 708 கோடி வரையில் செலவு செய்யப்பட்டது,"

என்று, மத்திய நீர்ப்பாசனக் கழகத்தில் பேசுகையில், திட்டக் குழு துணைத் தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் குறிப்பிட்டு விட்டு, மேலும் சொன்னார்:—

"முதல், இரண்டாவது திட்டக் காலத்தில், ரூ. 1,071 கோடி செலவில் 372 இலட்சம் ஏக்கர்களுக்கு அதிகப்படியான நீர்ப்பாசன வசதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முதல் திட்டக் காலத்திலேயே 70 இலட்சம் ஏக்கர்களுக்கும், இரண்டாவது திட்டத்தில் மேலும் 150 இலட்சம் ஏக்கர்களுக்கும், 3-வது திட்ட காலத்தில் மீதமுள்ளவைகளுக்கும் இந்த நீர்ப்பாசன வசதி கிடைக்கும்."

பாபுராவ் தண்டனை உறுதிபடுத்தப்பட்டது

நாகபுரி, நவ 9—

கடந்த மார்ச் 12-ந் தேதியன்று நாகபுரிக்கு வந்த பிரதமர் நேருவைக் கொல்ல முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பாபுராவ் என்ற ரிக்‌ஷா இழுப்பவருக்கு, நாகபுரி செஷன்ஸ் நீதிபதி விதித்திருந்த ஆறு ஆண்டுக் கால தண்டனையை உறுதி செய்து, நாகபுரி உயர்நீதி மன்ற நீதிபதி பி. சேசாத்திரி, பாபுராவ் 'அப்பீல்' செய்துகொண்ட வழக்கின்போது தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

அரிசியும் - ஆயுதமும்!

அன்பளிப்பாகப் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன

பர்மாவும்—யூகோஸ்லேவியாவும் முறையே அரிசி, ஆயுதங்கள் ஆகியவற்றை ஒருவருக்கொருவர் அன்பளிப்பாகப் பரிமாறிக்கொள்வர் என்று தெரியவருகிறது.

இந்தத் தகவலை இங்கு வந்திருக்கிற பர்மியப் பிரதமர் யூ-நூ வெளியிட்டிருக்கிறார்.

யூகோ அதிபர் மார்ஷல் டிட்டோ பர்மாவுக்கு ஆயுதங்கள் அன்பளிப்பாகத் தருவதாகத் தெரிவித்ததாயும், பர்மா அதே நேரத்தில் 20,000 டன் அரிசி அன்பளிப்பாக யூகோவிற்குத் தருவதாயும், யூ-நூ தகவல் தந்திருக்கிறார். யூகோ வழங்கும் ஆயுதங்கள் பர்மாவின் தற்காப்பிற்காக மட்டுமே என்றும், ஆக்கிரமிப்பிற்காக அல்ல என்றும் யூ-நூ தெளிவாக்கினார்.

'மணிமகுடம்'- நாடகம்

11—11—55 மாலை 6-45 மணிக்கும், 12—11—55 இரவு 9-30 மணிக்கும், பெங்களூர் சிடி, காந்தி நகர் குப்பி தியேட்டரில், இலக்கு மணபுரி தி. மு. க. நூல்நிலைய வளர்ச்சிக்காக, எஸ். எஸ். இராசேந்திரன் நாடக மன்றத்தார் நடிக்கும் தோழர் மு. கருணாநிதி எழுதிய 'மணிமகுடம்'—நாடகம் நடைபெறும்.

சொற்பொழிவுக் கூட்டம்

11—11—55 மாலை 7 மணிக்கு, சென்னை—முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில் தோழர் கா. வி. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் 'பண்டிகைகள் தேவையா?' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

பூங்கா, கடற்கரைகளில் இனவேற்றுமை ஒழிப்பு

அமெரிக்கப் பிரதம நீதிமன்ற தீர்ப்பு

"அமெரிக்காவில் பூங்காக்கள், கடற்கரைகள், நீச்சல் குளங்கள், குளிக்கும் அறைகள் முதலிய இடங்களில் இனவேற்றுமை முறைகளைப் பின்பற்றுவது சட்டவிரோதமாகச் செல்லாது,"

என்று, அமெரிக்கப் பிரதம நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள மேரிலாந்து, ஜியார்ஜியா ஆகிய மாநிலங்களில் இவ்வசதிகள் மறுக்கப்பட்டதன் காரணமாகவே இத்தீர்ப்பு அளிக்கப்பட்டது.

பஞ்சாயத்துத் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்க்கார் முற்பட வேண்டியிருக்கும் என்பதால், இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்களை சர்க்கார் ஒத்திவைக்க வேண்டிவருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்களை ஒத்திவைப்பதற்கென அதிகாரம் பெறுவதற்காக மசோதா ஒன்றை சட்டசபையில் சர்க்கார் கொண்டுவரும் என்றும் தெரியவருகிறது.

மிச்சப்படுத்த முடியுமா?

"நாட்டிலுள்ள 9 கோடி குடும்பங்களும், நாள்தோறும் ஓரணா மிச்சப்படுத்தி சேமித்து வைத்தால்கூட, நாட்டின் ஆண்டு சேமிப்பு ரூ. 200 கோடியாகிவிடும்; இரண்டாவது திட்டக் கால முழுமைக்குமாக ரூ 1,000 கோடி சேமிக்க முடியும்,"

என்று, திட்டக் குழு துணைத் தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரி டில்லி வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

நகர் தோன்றிய நாள்

வீதி முழுமையிலும் தங்கமுலாம் பூசப்படுமாம்!

ஜோஹன்ஸ்பர்க், நவ 9—

அடுத்த ஆண்டில், தென்னாப்பிரிக்காவிலுள்ள ஜோஹன்ஸ்பர்க் நகரின் 70-வது ஆண்டு தோற்ற நாள் வருகிறது.

அன்று, நகருக்கு வளம் தந்த தங்கத்தை, நகரின் ஒரு தெருவில் பரப்பப் போகின்றனராம்.

அந்தத் தெரு முழுவதும் தங்கமயமாக ஒளிவீசும் பொருட்டு, ஒரு முலாம் பூசும் ஏற்பாடு செய்யப்படுமாம்!

சர்க்கார் ஊழியர் நிலை உயர்த்தப்படுமா?

சென்னை, நவ. 10—

சர்க்காருக்கும்—சர்க்கார் ஊழியர்களுக்குமிடையே அதிக ஒத்துழைப்பு ஏற்படுத்தவும், சர்க்கார் ஊழியர்களின் குறைகளைப் பரிசீலனை செய்யவும் சிவில் சர்வீஸ் கூட்டுக் கவுன்சில் ஒன்றை சென்னை சர்க்கார் நிறுவியுள்ளதாகக் கூறப்படுகிறது. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து இந்நிறுவனம் செயல்படத் தொடங்கும்.

துவக்கத்தில், சர்க்கார் காரியாலயம், வருமான—மருத்துவ—மராமத்து ஆகிய இலாகாக்கள்தான், இந்தக் கவுன்சிலில் கலந்துகொள்ளும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.